செ. கு. எண்: 010 நாள்: 21.01.2019

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி**
அவர்களின் அறிக்கை – 21.1.2019

**திண்டுக்கல் மாவட்டம்,** பரப்பலாறு அணையிலிருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், பரப்பலாறு நீர்தேக்கத்திலிருந்து பயன்பெறும் நங்காஞ்சியாற்று படுகையில் விருப்பாட்சி கிராமம் முதல் ஜவ்வாதுப்பட்டி கிராமம் வரையுள்ள குடிநீர்க் கிணறுகள், தடுப்பணைகள், அணைகட்டுகள் ஆகியவற்றை செறிவூட்டும் பொருட்டும், பரப்பலாறு நீர்த்தேக்கத்தின் கீழ் பாசனம் பெறும் குளங்களின் 1323 ஏக்கர் நிலங்கள் மற்றும் அதில் உள்ள கிணறுகள் பயன்பெறும் வகையிலும், பரப்பலாறு நீர்தேக்கத்திலிருந்து **25.1.2019 முதல் 6.2.2019** வரை மொத்தம் 75.51 மி.க.அடி தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் வட்டத்தில் உள்ள **1323 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**